**செய்தி வெளியீடு எண் : 452** **நாள் : 04.03.2023**

**செய்திவெளியீடு**

ஒன்றிய MSME துறையின்– சென்னை MSME வளர்ச்சி அலுவலகம் மற்றும் தமிழ்நாடு MSME துறையின் FaMeTN நிறுவனமும் இணைந்து 03.03.2023 மற்றும் 04.03.2023 ஆகிய 2 தினங்களில் கிண்டி தொழிற்பேட்டையிலுள்ள சிட்கோ கூட்டமைப்பு கட்டிடத்தில் "MSME கனெக்ட் 2023" கண்காட்சி மற்றும் விற்பனையாளர் மேம்பாட்டு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் திருமதி.சிஜிதாமஸ் வைத்யன், இ.ஆ.ப அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள். டான்ஸ்டியா அமைப்பின் தலைமையக மேலாண்மை இயக்குநர், திரு. ஜி. கதிரேசன், அவர்கள் மற்றும் ஒன்றிய அரசின் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் வளர்ச்சி அலுவலக, இணை இயக்குநர், திரு. சுரேஷ் பாபுஜி மற்றும் சி.பி.சி.எல் மேலாண்மை இயக்குநர் திரு.அரவிந்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, சிறந்த குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு விருதுகளை வழங்கி தலைமையுரை ஆற்றிய, மாண்புமிகு குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா. மோ. அன்பரசன் அவர்கள் MSME தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் பெரும் தொழிற்சாலைகளுக்கு இணையாகவும் அவற்றிள் உற்பத்திக்கு உறுதுணையாகவும் விளங்குகிறது எனவும், தமிழ் நாட்டில் வாகன உற்பத்தி, தோல் பொருட்கள், ஜவுளி மின்சாதனங்கள், கணினி மற்றும் தொலை தொடர்பு சாதனங்கள் என அனைத்து தொழில்களிலும் நமது MSME நிறுவனங்கள் சிறந்து விளங்குகின்றன என்றார்கள். **தமிழ் நாட்டிலுள்ள MSME நிறுவனங்களுக்கு பிணையில்லா கடன் எளிதில் கிடைக்கும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களால் ரூ. 100 கோடி நிதியில் *"தமிழ்நாடு கடன் உத்திரவாத திட்டம்"* துவக்கி வைக்கப்பட்டது என்றார்.** கழக அரசு பொறுப்பேற்றதலிருந்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமிழ் நாட்டில் உள்ள MSME நிறுவனங்களுக்கு பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார் என்றார்.

இந்தியாவிலேயே MSME நிறுவனங்களுக்கு 90% வரை கடன் உத்திரவாதம் வழங்கி வரும் ஒரே மாநிலம் தமிழ்நாடு தான் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொண்டார். இத்திட்டத்தின் கீழ் இதுவரை ரூ. 20 கோடி அளவுக்கு MSME தொழில்களுக்கு அரசு உத்திரவாதம் வழங்கி உள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டார்.

MSME நிறுவனங்களின் Working Capital என்னும் நடைமுறை மூலதன நிதி சிக்கலை தீர்க்கும் விதமாக MSME நிறுவனங்கள் அரசு மற்றும் பெரும் நிறுவனங்களுக்கு வழங்கிய Bill–களுக்கு குறைந்த வட்டியில் Bill Discounting செய்துபொருட்களுக்கான தொகையினை பெறும் வகையில் தமிழ்நாடு வர்த்தக வரவுகள் மற்றும் தள்ளுபடி தளம் – Tamil Nadu–TReDS எனும் புதுமையான திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.இத்திட்டத்தின் கீழ், இதுவரை ரூ. 150 கோடிக்கும் அதிகமான விலைப் பட்டியல்களுக்கு விற்பனை தொகை வழங்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொண்டார்.

இத்திட்டத்தில் மேலும் ஒரு சிறப்பு அம்சமாக இத்தளத்தில் இணைந்துள்ள 14 வங்கிகள் தங்களுடைய கடன் இலக்கை ரூ. 2 ஆயிரத்து 120 கோடி அளவிற்கு நிர்ணயித்துள்ளன. இத்திட்டத்தின் கீழ் இதுவரை ரூ. 150 கோடிக்கும் அதிகமான விலைப் பட்டியல்களுக்கு விற்பனை தொகை வழங்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒன்றிய மற்றும் தமிழ்நாடு அரசின் பொதுத்துறை நிறுவனங்கள் தாங்கள் செய்யும் கொள்முதல்களில்25 சதவீதம் MSME நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்ய அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இந்த கொள்முதலில் 4 சதவீதம் பட்டியல் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோர்களிடமிருந்தும்3 சதவீதம் பெண் தொழில் முனைவோர்களிடமிருந்தும் கொள்முதல் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் குறு, சிறு நிறுவனங்களை ஊக்கப்படுத்தும் விதமாக, முதலீட்டு மானியம், மின் மானியம், வட்டி மானியம் என10 வகையான மானியங்கள்

வழங்கப்படுகிறது. கழக அரசு பொறுப்பேற்று இதுவரை **ஆயிரத்து 150 நிறுவனங்களுக்கு** ரூ. 519 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது என்றார்.

MSME துறையின் தாய்கோ வங்கி மூலம் கடன் உத்திரவாத திட்டம் மற்றும் TN–TReDS திட்ட பயனாளிகளுக்கும், சிட்கோ தொழில் மனை ஒதுக்கீட்டாளர்களுக்கும் கடன் உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்தியாவின் ஒட்டுமொத்த ஏற்றுமதியில் தமிழ் நாட்டின் பங்களிப்பு 9.25 சதவீதமாக உள்ளது. இதனை ஊக்குவிக்கும் விதமாக தொழிற்சாலைகள் மற்றும் MSME தொழில் நிறுவனங்களின் உற்பத்தி பொருட்களை ஏற்றுமதி செய்ய ஏதுவாக தமிழ்நாட்டில் ரூ. 100 கோடி மதிப்பீட்டில் 10 இடங்களில் உள்ள ஏற்றுமதி மையங்களை மேம்படுத்த அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், MSME நிறுவனங்களுக்கு ஏற்றுமதி குறித்த ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்க கோயம்புத்தூர் – திருச்சி – ஒசூர் – மதுரைஆகிய 4 இடங்களில் வர்த்தகம் மற்றும் ஏற்றுமதி தகவல் மையங்கள்அமைக்க ரூ. 16 கோடியே 69 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த ஏற்றுமதி மையங்கள் மூலம் ஏற்றுமதியாளர்கள் இங்கு தயாரிக்கப்படும் பொருட்களுக்கு பிற நாடுகளில் உள்ள சந்தை வாய்ப்புகளைஅறிந்து கொள்வதோடு. உற்பத்தியாளர்களுக்கு தேவைப்படும் மூலப்பொருட்கள் கிடைக்கும் இடங்களையும், பிற விவரங்களையும்அறிந்து கொள்ளலாம். MSME தொழில் நிறுவனங்களுக்கு தரச்சான்றிதழ்கள், ஏற்றுமதி விழிப்புணர்வு, மின் வணிக விற்பனை தளங்களில் இணைப்பு, வாங்குவோர் – விற்போர் சந்திப்பு, ஆற்றல் சேமிப்பு ஆகியவை குறித்து விழிப்புணர்வு கூட்டங்கள் தமிழ்நாடு அரசின் FaMe–TN மூலம் நடத்தப்படுகின்றன.

கழக அரசு பொறுப்பேற்ற பின்MSME தொழில் நிறுவனங்கள் வர்த்தரீதியாக தங்களின் உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்த வெளிநாடுகளுக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளனர். ஏரோ ஸ்பேஸ் தொழிலுக்காக செக் குடியரசுக்கும், பாதுகாப்பு உபகரணங்களுக்காக இஸ்ரேல் நாட்டிற்கும், தமிழ்நாட்டின் தொழில்முனைவோர் தொழில் கூட்டமைப்பினர் அரசு நிதியுதவியுடன் சென்று வந்துள்ளனர்.

"MSME கனெக்ட்– 2023" கண்காட்சி மற்றும் விற்பனையாளர் மேம்பாட்டு நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ள தொழில் முனைவோர்கள், தமிழ்நாடு அரசால் முன் எடுக்கப்படும் இதுபோன்ற புதிய முயற்சிகளையும், மானியங்களையும், நிதி உதவிகளையும், பயன்படுத்தி மாண்புமிகு முதல்வரின் 2030 இல் ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரம் எனும் இலக்கினை அடைய நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம்" என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில், 500க்கும் மேற்பட்ட MSME நிறுவனங்கள், சுமார் 45 க்கும் மேற்பட்ட பெரிய அரசு நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் பங்கேற்றன. மேலும், ஆவடி கனரக வாகன தொழிற்சாலை சில MSME நிறுவனங்களுக்கு – கொள்முதல் ஆணைகள் வழங்கியது. இந்நிகழ்ச்சியில் ஒன்றிய அரசின் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் வளர்ச்சி அலுவலக உதவி இயக்குநர் திரு. கிரண் தேவ் சத்லூரி நன்றியுரை ஆற்றினார்கள். இந்நிகழ்ச்சியில் தொழில் வணிக கூடுதல் ஆணையர் திருமதி கிரேஸ் பச்சாவ் இ.ஆ.ப, FaMe TN பொது மேலாளர், திரு. சு. சக்திவேல், மற்றும் பல்வேறு பொதுத்துறை நிறுவனங்களின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in